கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் ஏற்பாட்டில், மீன் மற்றும் காய்கறி வியாபாரம் செய்யும் மகளிர்களுக்கு சீருடையும், 500 நபர்களுக்கு அறுசுவை உணவினையும் எஸ்.அரவிந்தரமேஷ் எம்.எல்.ஏ., மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராசன், மாநில இலக்கிய அணி பொருளாளர், தொகுதி பார்வையாளர் என்.சந்திரபாபு, தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணை செயலாளர்கள் பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பகுதி செயலாளர் வி.இ.மதியழகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண்குமார் ஆகியோர் வழங்கினார்கள். உடன் கே.வி.சாந்தப்பன், ஜானகிராமன், பார்த்தசாரதி, சீனு, பிரேம்குமார், காந்தா, ஆர்.சி.குப்பன், ராஜா, ராமு, சிவசங்கர், நாகம்மாள்காந்தி, மு.காந்தி, என்.ஆர்.குப்பன், துரைசாமி, காண்டாண்டி, மோகன்குமார், ராமதாஸ், வெங்கடேசன், ராஜேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிறுவாக்கம் ஊராட்சியில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்டம் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு வழங்கினார் இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திரு.வி.க.நகரில் ரூ.5.01 கோடியில் சென்னை – தொடக்கப்பள்ளிக் கட்டடம்! ரூ10.32 கோடியில்

இராயபுரம் மண்டலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகை!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 3-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராயபுரம் மண்டலத்தில் ரூ.10.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகையினையும், திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூ.5.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சென்னை தொடக்கப்பள்ளிக் கட்டடத்தினையும் நேற்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.03.2026) இராயபுரம் மண்டலம், வார்டு52, கல்லறை சாலையில் ரூ.10.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகையினையும், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-73, புளியந்தோப்பு, திருவேங்கடசாமி தெரு சென்னை தொடக்கப்பள்ளியில் ரூ.5.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தினையும் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகை கல்லறை சாலை

இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், வார்டு52, கல்லறை சாலையில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தியின் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 10.32 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகை கட்டப்பட்டுள்ளது.

இந்தத் திருமண மாளிகை 19,528 சதுர அடி கொண்டதாகும். தரைத்தளத்தில் கார் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், நவீன சமையற்கூடம் மற்றும் 125 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடுவதற்கான வசதிகளும், குளிரூட்டப்பட்ட 350 நபர்கள் இருக்கைகள் கொண்ட திருமணம் நடைபெறும் தளம், மணமகன் அறை, மணமகள் அறை, 8 தங்கும் அறைகள், 13 நபர்கள் செல்லும் வகையிலான மின்தூக்கி வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்கள் பெரிதும் பயன்பெறுவர்.

சென்னை தொடக்கப் பள்ளிக் கட்டடம் புளியந்தோப்பு

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம்,

வார்டு73, புளியந்தோப்பு, திருவேங்கடசாமி தெரு, சென்னை தொடக்கப் பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சிங்காரச் சென்னை 2.0 நிதியின் கீழ் ரூ.5.01 கோடி மதிப்பீட்டில் 17,186 சதுர அடி பரப்பளவில் புதிதாக பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடமானது தரைத்தளத்தில் 7 வகுப்பறைகள் மற்றும் 5 கழிவறைகள், முதல் தளத்தில் 7 வகுப்பறைகள் மற்றும் 5 கழிவறைகள், இரண்டாம் தளத்தில் பொது அறை, 4 வகுப்பறைகள் மற்றும் 5 கழிவறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்பள்ளியில் தொடக்கப் பள்ளியில் 232 மாணவர்களும், சென்னை உயர்நிலைப் பள்ளியில் 398 மாணவர்கள் என மொத்தம் 630 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

பின்னர், துணை முதலமைச்சர் அவர்கள் இப்பள்ளியில் பயிலும் 630 மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி (திரு.வி.க.நகர்), ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), ஐட்ரீம் ஆர். மூர்த்தி (இராயபுரம்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வட்டார துணை ஆணையாளர்கள் எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), கட்டாரவி தேஜா, (வடக்கு), மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மு.சரவணன், அம்பேத்வளவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆலோசனைப்படி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி.சிவக்குமார் ஏற்பாட்டில் மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கினார். இதில் உதயசூரியன், டி.எம்.சுகுமார், பி.எஸ்.சதீஷ்குமார், ஓ.எஸ்.விக்னேஷ், யுவராஜ், எம்.ஆர்.சுப்பிரமணி, பி.ஜி.அண்ணாதுரை, ஏ.வெங்கடேசன், எம்.சி.வெங்கடேசன், பரதேசி, டி.கே.ரவி, கே.எஸ்.சாமிநாதன், கே.எஸ்.அசோகன், பாலசுந்தரம், மகளிரணி பி.எஸ்.பூங்கொடி, ஜானகி, மல்லிகா, ஜெயா, சரோஜாதேவி, வள்ளி, மணியம்மாள், அம்பிகா, தேவி, ராஜேஸ்வரி, பவானி, சாந்தி, லதா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் பேருந்து நிலையத்தில் அமைத்துள்ள டாக்டர் அம்பேத்கார் சிலை அருகில் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் எம்.சி., ஏற்பாட்டில் 5000 பேருக்கு அறுசுவை உணவை எஸ்.ஆர் ராஜா.எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, எஸ். இந்திரன் எம்.சி., டி.ஆர். கோபி, ரமணிஆதிமுலம், பி.ஜோதிகுமார், செ.சுரேஷ், பெரியநாயகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.44 கோடியில் – சென்னை நடுநிலைப்பள்ளிக் கட்டடம்–

தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் - ஆர்.கே.நகர் விளையாட்டு வளாகம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 3-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட புழல் மகாலஷ்மி நகரில் 12.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டையில் 21.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், புது வண்ணாரப்பேட்டையில் 19.70 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆர்.கே. நகர் விளையாட்டு வளாகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம்:

மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புழல் மகாலஷ்மி நகரில் அமைந்துள்ள மாதவரம் ஊராட்சி ஒன்றிய பள்ளியானது 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறந்து வைக்கப்பட்டது. தற்போது வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 12.39 கோடி ரூபாய் செலவில் 43.560 சதுர அடி மொத்த பரப்பளவில் 37,342 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் சென்னை நடுநிலைப் பள்ளி கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த பள்ளிக் கட்டடத்தில் 27 எண்ணிக்கையிலான வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, பதிவு அறை, 2 ஆய்வகங்கள் (அறிவியல் மற்றும் கணினி) உடற்கல்வி கூடம், நூலகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சேமிப்பு அறை, ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறைகள், 45,500 லிட்டர் கொள்ளவு கொண்ட கீழ்நிலை நீர்த் தொட்டி, 31,590 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை தொட்டி, 13,260 லிட்டர் கொள்ளவு கொண்ட தீயணைப்பு மேல்நிலை தொட்டிகள், 93,100 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர்த் தொட்டி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தண்டையார்பேட்டை பேருந்து நிலையம்

ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை பேருந்து நிலையமானது வடசென்னை மக்களின் முக்கிய போக்குவரத்து வசதியாக இருந்து வருகிறது. இந்த பேருந்து நிலையம் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 21.95 கோடி ரூபாய் செலவில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் 15 பேருந்துகள் நிறுத்தும் வசதி, 25 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, 157 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, மின் தூக்கி, 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்சேமிப்பு தொட்டி, 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் சேமிப்பு தொட்டி என நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் உணவகங்கள், ஏ.டி.எம். மையம், 3 கடைகள், மாதாந்திர பயண சீட்டுகள் வழங்கும் அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, பயணிகளுக்கு இருக்கை வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்பிடங்கள், பணிமனை அலுவலகம், பயிற்சி கூடம், கட்டுபாட்டு அறை, கணினி பிரிவு, காத்திருப்பு கூடம், பொது மேலாளர் அறை, பேருந்து நிலைய மேலாளர் அறை, சிசிடிவி கண்காணிப்பு வசதி, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான குளிரூட்டப்பட்ட தங்குமிடங்கள், பாதுகாப்பு பெட்டகம், குளியல் மற்றும் ஒப்பனை அறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

ஆர்.கே. நகர் விளையாட்டு வளாகம்

ஆர்.கே.நகர் விளையாட்டு வளாகமானது 37,157 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. இவ்விளையாட்டு வளாகத்தில் 60 எண்ணிக்கை 4 சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம், 50 எண்ணிக்கை 2 சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் இடம், 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட நீர் சேமிப்பு தொட்டி, 33,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி, வெளிப்புற உடற்பயிற்சி கூடம் மற்றும் திறந்தவெளி அரங்கத்துடன் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தரை தளத்தில் உள்ள பல் நோக்கு கூடத்தில் ஒரு கூடைப் பந்து விளையாட்டு மைதானம், 2 எண்ணிக்கையிலான டேபிள் டென்னிஸ் விளையாட்டு பகுதி, உடற்பயிற்சி கூடம், முதலுதவி அறை, நிர்வாக அறை, உணவு கூடம், மின்சார அறை, மின்தூக்கி வசதி, உபகரணங்கள் அறை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பாதுகாப்பு பெட்டக அறை, குளியல் மற்றும் ஒப்பனை அறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் உள்ள பல் நோக்கு கூடத்தில் 2 குத்துச்சண்டை மைதானங்கள், குளியல் மற்றும் ஒப்பனை அறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் வளாகத்தின் மேற்பகுதியில் 10 KV திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபிநேசர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் சந்திர சேகர் சாகமூரி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டாரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் எஸ்.நந்தகோபால், நேதாஜி யு.கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாதவரம் 26வது வட்டக் கழக சார்பாக மேட்டுமா நகரில். தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவரது 73 வது வயது பிறந்தநாள் முன்னிட்டு கழக கொடி ஏற்றி 500 பேருக்கு மாதவரம் சேர்மன் எஸ்.நந்தகோபால் உணவு வழங்கினார். உடன் வட்டக் கழகச் செயலாளர் E. ராஜேஷ் மாதவரம் லோ.ந.மதி வட்ட துணைச் செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

எஸ்.முரளி முன்னிலை!

124 அ வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

வட்டச்செயலாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 04-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்டம் வழங்கும் விழா இன்று (04.03.2026 - புதன்கிழமை) காலை 7 மணி முதல் 10 மணி வரை சத்தியவாணி முத்து நகர், சாரதாபுரம் பகுதி வாழ் மக்கள் சுமார் 1000 பேருக்கு நலத்திட்டங்களை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

124வது அ வட்டக் கழக செயலாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பேசின் சாலை மூலக்கொத்தளத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மாணவர் அணி சார்பில் மாமன்ற உறுப்பினர் வேளாங்கண்ணி இனிப்புகள் வழங்கினார். உடன் இராயபுரம் மேற்கு பகுதி மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்தி தாசன், மு.க. பாண்டியன், சிலம்பரசன், முன்னாள் பகுதி பிரதிநிதி, ஆட்டோ ஓட்டுநர்கள் உடன் இருந்தனர்.